# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2363/04 - 2023 දෙසැම්බර් මස 18 වැනි සඳුදා - 2023.12.18

*2363/04 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*அறிவித்தல் இலக்கம் 1*

**(175 ஆவது அத்தியாயமான) யாத்திரிகள் கட்டளைச் சட்டம்**

*சிவனொளிபாத மலை வாரம் - 2023/2024*

மேற்குறிப்பிட்ட யாத்திரைக் கால வாரம் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி முதல் 2024 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

யாத்திரை கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் யாத்திரைக் காலத்தில் செல்லுபடியாகும் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி
1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க வர்த்தமானி
1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க வர்த்தமானி
1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க வர்த்தமானி
1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க வர்த்தமானி
2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி

**வசந்த குணரத்ன,**
இரத்தினபுரி மாவட்டச் செயலாளர்/
அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்டம்.

இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
2023, திசெம்பர் 13.


1A - G 41037— 16 (2023/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அறிவித்தல் இலக்கம் 2

சிவனொளிபாத மலை வாரம் – 2023/2024

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி, 1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க வர்த்தமானி, 1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க வர்த்தமானி, 1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க வர்த்தமானி, 1962, மார்ச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க வர்த்தமானி, 2017 செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி, ஆகியவற்றின் முதல் யாத்திரைக் காலம் தொடர்பான ஒழுங்கு விதியினை பொது மக்களின் அவதானத்திற்கு செலுத்துகின்றேன். இவ் ஒழுங்குவிதி தொடர்பாக கீழ்க் குறிப்பிட விடயங்களை அறியத்தருகின்றேன்.

இவ் ஒழுங்குவிதி தொடர்பாக கீழ் குறிப்பிட்ட விடயங்களை அறியத்தருகின்றேன்.

**01. ஓய்வறை/அம்பலம் என்பது**

1.1 லிஹிணிஹெல, பலாபத்தல விகாரை, ஹெரமிடிபான, ஆண்டியாமலதென்ன, வர்னகல, சீதகங்குல, மெதஹின்ன, இந்திகடுபான என்பவற்றை ஓய்வறையாக அல்லது அம்பலம் தங்குமிடங்களாக உபயோகித்தல் வேண்டும்.

1.2 தற்காலிக தங்குமிடங்கள் தயார் செய்தல் அல்லது நடாத்திச் செல்லுதல் கூடாது.

**02. கட்டிடங்கள் கட்டுதல்**

நான் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அலுவலரின் எழுத்துமூல அனுமதியின்றி யாரினாலும் 2023 திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி முதல் 2024 மே மாதம் 24 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடம், தங்குமிடங்கள், வியாபாரத் தலங்கள் நிறுவக் கூடாது.

**03. யாசகர்கள்**

சிவனொளிபாத ஸ்தலத்தில் அல்லது அம்பலத்தில்/ஓய்வறைப் பகுதியில் எந்தவோர் இடத்திலும் யாசகர்கள் யாசகம் கேட்பது அல்லது பெறல், யாசகம் வழங்குதல் கூடாது.

**04. குளித்தல் மற்றும் கழுவுதல்**

4.1 தற்போது வனப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் மாகாண நிர்வாக ஸ்தாபனங்களூடாக கண்டுபிடிக்கப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான இடங்களன்றி ஏனைய இடங்களில் குளித்தல் அல்லது துணிகளை கழுவுதல் கூடாது.

4.2 தனியார் நிறவனங்கள் ஊடாக குளித்தல் அல்லது துணி கழுவுவதற்கான இடவசதிகளை வழங்குவதற்குரிய ஏற்பாட்டினை மேற்கொள்ள எண்ணியிருப்பின் அதற்கான வனப் பாதுகாப்புத் திணைக்களம், மாகாண சபை நிர்வாகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சட்டபூர்வமான எழுத்து மூல அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**05. வாகனம்/பிரயாணப் பாதை**

5.1 பிரதேச சபை அல்லது உரிய மாகாண நிர்வாக சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் வாகனங்கள் நிறுத்துதல் அல்லது உட்பிரவேசித்தல் கூடாது.

5.2 யாத்திரைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதான பாதையாவது ரஜமாவத்த (பலாபத்தல வீதி), ஹட்டன் நல்லதண்ணி வீதி மற்றும் குருவிட்ட எரத்ன வீதியாகும்.

**06. சுற்றாடல் மற்றும் உட்கட்டமைப்பு**

6.1 யாத்திரையின் போது பாதையில் அல்லது சிவனொளிபாத மலை சுற்றுப்புறத்தில் அல்லது ஓய்வு சாலை அருகே சுற்றாடலை மாசுப்படுத்தும் விதமாக பொலித்தின், பிளாஸ்டிக் என்பவற்றை முறையற்ற விதத்தில் அகற்றுதல் கூடாது.

6.2 சிவனொளிபாத மலை வனப்பிரதேசத்தினுள் தீ பிடிக்கும் வகையிலான தீச்சுவாலைகள் ஏற்படுத்தல் கூடாது.

6.3 யாத்திரைக் காலத்தில் பக்தர்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் குப்பைகளை அகற்றும் நடவடிக்கையினை மாகாண நிர்வாக காரியாலயம் மற்றும் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்திற்கும் வழங்குகின்றேன்.

6.4 சாலை கைப்பிடிகளை கிருமி நாசினி செய்தலின் பொறுப்பு மாகாண நிர்வாக காரியாலயத்திற்கு வழங்குகின்றேன்.

**07. வைத்திய வசதிகள்**

தனியார் நிறுவனங்கள் ஊடாக வைத்திய வசதிகள் வழங்குவதற்கு எண்ணியிருப்பின் வைத்திய சிகிச்சை/முதலுதவி மத்தியஸ்தானங்களுக்காக மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் மற்றும் மாகாண நிர்வாக காரியாலயங்களின் முன்னறிவித்தலுடனான எழுத்துமூல அனுமதியினைப் பெறல் வேண்டும்.

**08. வியாபாரம் மற்றும் நன்கொடை**

8.1 சிவனொளிபாத ஸ்தலத்தில், ஓய்வறைப் பிரதேசங்களில் நடமாடும் வியாபாரம் செய்வது தடை.

8.2 நான் அல்லது என்னால் அனுமதியளிக்கப்பட்ட அலுவலரினால் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் பூஜைப் பொருட்கள், பூஜைக்கான தட்டுகள், உணவுப் பொருட்கள் அல்லது ஏனையப் பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.

8.3 மதுபானம், புகைப்பொருள் அல்லது போதைப் பொருட்கள் யாத்திரையின் போது எடுத்துச் செல்லல் அல்லது வியாபாரத் தலங்களில் வைத்தல், விற்பனை செய்தல், அல்லது உபயோகித்தல் கூடாது.

8.4 உட்பிரவேசிப்பு வீதி ஓரங்களில் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர்ந்த ஏனைய எந்த இடத்திலும் தற்காலிக அல்லது நிரந்தர வியாபாரத் தலங்களை அமைத்தல் அல்லது நடாத்திச் செல்லல் அல்லது வியாபாரம் செய்தல் கூடாது.

8.5 அனைத்து வியாபாரத் தலங்களிலும், கட்டடங்களிலும் குப்பைகளை அகற்றுவதற்கான குப்பைக் கூடைகளை வைத்திருப்பதுடன் குப்பைகளை அதனுள் இட வேண்டும்.

8.6 வியாபாரத்திற்காக தயாரித்து வைக்கப்பட்டுள்ள உணவுப் பண்டங்களில் ஈக்கள் படியாதவாறு பாதுகாப்பான முறையில் மூடி வைக்க வேண்டும்.

8.7 அன்னதானம் (தன்சல்) வழங்கப்படும் பட்சத்தில் அக்காலகட்டத்திற்கேற்ற சுகாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு அதனை மெற்கொள்வதோடு என்னிடம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஒருவரிடம் ஏற்கனவே அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**9. கொவிட் - 19 தொற்று காலத்தினுள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்.**

நாட்டில் நிலவும் தொற்றுநோய் நிலைமையை கருத்திற் கொண்டு சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட முறையான சுகாதார வழிமுறைகளை பின்பற்றி வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

**10. சிவனொளிபாத மலை யாத்திரைக்கு வருகைத் தரும் நபர்கள் சிவனொளிபாத ஸ்தலத்தினுள் தங்குவதை தவிர்த்து யாத்திரை முடிந்ததும் உடனடியாக வெளியேற வேண்டும்.**

**வசந்த குணரத்ன,**
இரத்தினபுரி மாவட்டச் செயலாளர்/
அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்டம்.

இரத்தினபுரி மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
2023, திசெம்பர் 13.

EOG 12 - 0263